# மாதவரம் கண்டனக் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை...

7–ஆம் பக்கத் தொடர்ச்சி



இந்திய ஒன்றியத்திலேயே பொருளாதாரம், கல்வி, தொழில்துறை, மகளிர் முன்னேற்றம், சுகாதாரம் என்று 11 துறைகளில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதல் மாநிலமாக சாதனை படைத்து கொண்டு இருக்கிறது.

அது மட்டுமல்ல, பள்ளிக்கல்வி முடித்துவிட்டு உயர் கல்வியில் சேர்கின்ற மாணவர்களின் சதவிகிதம் இந்தியாவின் சராசரி எவ்வளவு பார்த்தீர்கள் என்றால், வெறும் 28 சதவிகிதம். ஆனால், தமிழ்நாட்டின் சதவிகிதம் எவ்வளவு தெரியுமா, உயர் கல்வியில் சேருகின்ற மாணவர்களின் சதவிகிதம் 48%. இந்தியாவிலேயே முதலிடம் நம் தமிழ்நாடு.

இவ்வளவு சாதனைகளை நாம் தொடர்ந்து செய்த பிறகும், நிதி ஒதுக்கீட்டில் மட்டும் ஒன்றிய அரசு தமிழ்நாட்டை புறக்கணித்து கொண்டு வருகிறார்கள். தமிழ்நாட்டைத் தான் புறக்கணிக்கிறார்கள் என்று பார்த்தால், ஒட்டுமொத்த இந்தியாவின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக ஏதாவது ஒரு ஒதுக்கீடு இருக்கும் என்று பார்த்தால், எதுவுமே இல்லை. வேலைவாய்ப்புக்கென்று எந்தத் திட்டமும் கிடையாது. ஒன்றிய அரசு ஏற்கனவே செயல்படுத்துகின்ற நலத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டையும் பெரிய அளவில் குறைத்து விட்டார்கள்.

### ஒன்றிய அரசின் தவறான செயல்கள்

ஒன்றிய அரசின் தவறான செய்கைகளால் இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவில் இன்றைக்கு நம் நாட்டு மக்கள் அவதிப்பட்டு கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும் மோடியைப் பார்த்து பல நாடுகள் பயப்படுகிறது என்று சொல்கிறார்கள். அமெரிக்கா பயப்படுகிறது, இங்கிலாந்து பயப்படுகிறது என்று சொல்வார்கள். ஆனால், இன்றைக்கு அமெரிக்காவில் என்ன நடக்கிறது, என்று நாம் ஒவ்வொருவரும் தொலைக்காட்சியில், செய்தித்தாள்களில் பார்த்து வருகிறோம்.

இந்தியர்களை கை கால்களில் விலங்கு போட்டு அடிமைகள் மாதிரி, அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு அனுப்பி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க வேண்டும். இதைக் கண்டிக்க கூட திராணியில்லாத அரசாங்கம் தான் ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்பட்டு கொண்டிருக்கிறது. இதைப் பற்றி வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்களிடம் சென்று கேட்டால், என்ன தெரியுமா சொல்கிறார். இதெல்லாம் மிகவும் சர்வ சாதாரணம், அடிக்கடி நடக்கின்ற விஷயம்தான் என்று சொல்கிறார் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்கள்.

வேலைவாய்ப்பில் தோல்வி, பொருளாதாரத்தில் தோல்வி, வெளியுறவுக் கொள்கைகளில் தோல்வி, ஏதாவது ஒரு பாடத்தில் தோல்வியுற்றால் பரவாயில்லை. ஒன்றிய பா.ஜ.க. அரசு, நரேந்திர மோடி அரசு அனைத்துப் படங்களிலும் தோல்வியுற்று, இப்போது நின்று கொண்டிருக்கிறது.

### பாறை மேல் தியானம்

தமிழ்நாட்டு மக்களின் ஓட்டு வேண்டுமென்றால் மட்டும் தமிழ்நாட்டிற்கு வருவார் மோடி அவர்கள். உங்களுக்கு ஞாபகம் இருக்கும். சென்ற நாடாளுமன்றத் தேர்தல். தேர்தலுக்கு ஐந்து மாதங்களுக்கு முன்பு பிரதமர் மோடி அவர்கள் எத்தனை முறை தமிழ்நாட்டுகு வந்தார். ஒன்பது முறை வந்தார். அதுமட்டுமல்ல வாக்கு எண்ணிக்கையின் போது எங்கு இருந்தார். கன்னியாகுமரியில் ஒரு பாறை மேல் நின்று கொண்டு தியானம் செய்து கொண்டிருந்தார்.

ஆனால், தேர்தலுக்குப் பிறகு ஒரு முறை யாவது தமிழ்நாட்டிற்கு வந்தாரா இன்று நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இவர்களின் தோல்விகளை மறைக்க, கலவரம், மதம், மொழி என்று எதையாவது கிளப்பி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மத வெறியைத் தூண்டி அரசியல் லாபம் அடைய முடியுமா என்று நமது சங்கீகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் உங்கள் முன்பு உறுதியாகச் சொல்கிறேன், நம் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கின்ற வரை கறுப்பு சிவப்பு கொடியோடு ஒரு திராவிட முன்னேற்றக் கழகக்காரன் இருக்கின்ற வரை, இந்தத் தமிழ்நாட்டை வன்முறைக் காடாக மாற்ற எண்ணுகின்ற பாசிச பா.ஜ.க.வின் எண்ணம் ஒருபோதும் பலிக்கவே பலிக்காது.

வேலை வாய்ப்பில் முனைப்பு

நமது இளைஞர்களுக்கு ஒன்றிய அரசு தான் வேலை வாய்ப்புகளை வழங்கிட தவறிவிட்டது. ஆனால், நம் முதலமைச்சர் அவர்கள் வேலை வாய்ப்புகள் வழங்குவதில் முனைப்போடு உறுதியோடு செயல்பட்டு கொண்டு வருகிறார்.

மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், மாதம் ஆயிரம் ரூபாய். புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம் இப்படி பல திட்டங்களை வாரி வாரி கொடுக்கிறது நம் தமிழக அரசு.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டை எவ்வளவு புறக்கணித்தாலும் சரி, தமிழ்நாட்டு மக்களின் உழைப்பாலும், அறிவாற்றலாலும், திராவிட மாடல் அரசின் நிர்வாகத் திறமைகளாலும், தமிழ்நாடு எப்பொழுதுமே இந்தியாவின் முதன்மை மாநிலமாக திகழ்ந்து கொண்டு இருக்கும். ஆனால், இந்த நம்முடைய மகிழ்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், இங்கு இருக்கின்ற ஆளுநர் மூலமாகவும் நமக்கு இடையூறு செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

நமது சட்டமன்றத்தில் எந்த மசோதாவை நிறைவேற்றி அனுப்பினாலும், நம் ஆளுநர் அவர்கள் அதை வாங்கி வைத்துக் கொண்டு, ஒன்றிய அரசிற்கு அனுப்புவதே இல்லை. அதற்கு அவர் ஒப்புதல் தருவதே கிடையாது. ஒன்றிய அரசின் பட்ஜெட்டில், தமிழ்நாடு என்ற பெயர் எப்படி இல்லையோ, அதேபோல் சட்டமன்ற உரையை எடுத்து பார்த்தீர்கள் என்றால், ஆளுநரின் உரை இருக்கவே இருக்காது.

### ஆளுநருக்கு தமிழ் மக்கள் எதிர்ப்பு

ஒருமுறை கூட நாம் தயார் செய்து கொடுக்கின்ற உரையை அவர் படிப்பதே இல்லை. ஆளுநர் என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரா கிடையாது. ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டவர்தான் ஆளுநர். அவரின் ஒரே வேலை வருடத்திற்கு ஒருமுறை சட்டமன்றத்திற்கு வந்து, முதலமைச்சர் என்ன எழுதிக் கொடுக்கிறாரோ, அமைச்சரவை என்ன ஒப்புதல் தருகிறதோ அதைப் படித்துவிட்டு போவது மட்டும் தான் ஆளுநரின் வேலை. அதையாவது சரியாக செய்கிறார் என்று பார்த்தீர்கள் என்றால் அதுவும் கிடையாது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாநிலத்தின் பெயரையே மாற்ற வேண்டும் என்று சொன்னார். தமிழ்நாடு என்ற பெயர் எனக்குப் பிடிக்கவில்லை. அதை `தமிழகம்' என்று மாற்ற வேண்டும் என்று சொன்னார். ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்களும் எதிர்ப்பை தெரிவித்தவுடன். திறமையாக பல்டி அடித்துக் கொண்டார். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், தவறாகச் சொல்லிவிட்டேன் என்று சொன்னார்.

சென்ற ஆண்டு நம் ஆளுநர் உரையில் இருக்கின்ற அம்பேத்கரின் பெயர், பெரியாரின் பெயர், காமராஜரின் பெயர், கலைஞரின் பெயர் அனைத்து பெயர்களையும் தவிர்த்து விட்டு தனது இஷ்டத்திற்கு படித்தார். ஆனால் நம் முதலமைச்சர் அவர்கள் எழுந்து சட்டமன்றத்தில் சொன்னார். ஆளுநர் பேசிய எந்த உரையும், சட்டமன்ற குறிப்பில் ஏறாது, நாங்கள் கொடுத்து இருக்கின்ற உரைதான் சட்டமன்றத்தில் ஏறும் என்று சொன்னார்.

### வாக்கிங் வரும் ஒரே ஆளுநர்

இந்திய வரலாற்றிலேயே, தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றிலேயே, சட்டமன்றத்திற்கு வாக்கிங் செய்ய வருகின்ற ஒரே ஆளுநர் நம் ஆளுநர் ரவி அவர்கள் தான். அதேபோல் இந்த வருடம் வந்தார். ஒரு படத்தில் வடிவேலு காமெடி பார்த்திருப்பீர்கள். பெண் பார்க்க போவார்கள். பெண்ணை வர சொல்லுங்க என்று சொல்வார்கள். அந்தப் பெண் எப்போ வரும், எப்போது செல்லும் என்று யாருக்குமே தெரியாது. ஒவ்வொரு முறையும் நாங்களும் அப்படித்தான். சட்டமன்றத்திற்கு சென்று ஆளுநரைப் பார்க்கலாம் என்று உட்கார்ந்து இருப்போம். எப்போது வருகிறார், எப்போது செல்கிறார் என்று யாருக்குமே தெரியாது.

இந்த முறை என்ன சொல்லி விட்டு சென்றார். `தமிழ்த்தாய் வாழ்த்து' பாடக்கூடாது `தேசிய கீதம்'தான் பாட வேண்டும் என்று சொன்னார். அதை ஒரு காரணமாகச் சொல்லிவிட்டு வெளிநடப்பு செய்து விட்டு சென்று விட்டார்.

நம் தலைவர் இன்றைய கூட்டத்தில் கூட பிரதமர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் வைத்து இருக்கிறார். தயவுசெய்து வருகின்ற சட்டமன்றத் தேர்தல் வரைக்கும் இங்கு இருக்கின்ற ஆளுநர் திரு ஆர்.என்.ரவி அவர்களை மாற்றி விடாதீர்கள். எங்களுக்கான பிரச்சாரத்தை அவர் செய்து கொண்டு இருக்கிறார். எங்களை விட அதிகமாக வேலை பார்க்கிறார். நம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, நம் திராவிட மாடல் அரசுக்காக அதிகமாக வேலை பார்க்கிறார்.

### மாற்றி மாற்றிப் பேசுகிறார்

சில ஆண்டுகளுக்கு முன்பு `அன்னியன்' என்ற ஒரு படம் வந்தது. பார்த்து இருப்பீர்கள். அதுதான் நம் ஆளுநர் அவர்கள். பத்து நாட்களுக்கு முன்பு ஒரு கூட்டத்தில் சென்று பேசினார். தமிழ்நாடு தான் இருப்பதிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பான இடம் என்று பேசிவிட்டு அடுத்த இரண்டு நாட்களிலேயே மாற்றி மாற்றிப் பேசுகிறார். அப்படி ஒவ்வொரு விஷயத்தையும் மாற்றி மாற்றிப் பேசக்கூடியவர்தான் ஆளுநர் ரவி அவர்கள். இன்றைக்கு அவரைக் கண்டித்து, நம் உரிமையைக் காப்பாற்றுவதற்காக உச்ச நீதிமன்றத்தில் கழக அரசு வழக்கு போட்டு இருக்கிறது.

இன்றைக்கு உச்ச நீதிமன்றம் ஆளுநரின் தலையில் குட்டுகின்ற மாதிரி பல கேள்விகளைக் கேட்டு இருக்கிறது. சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்புகின்ற மசோதாவின் மீது, எந்த நடவடிக்கையும் எடுக்காமல் எதற்காக ஆளுநர் அவர்கள் காலதாமதம் செய்கிறார் என்று நாம் கேட்கவில்லை, உச்ச நீதிமன்ற நீதிபதி கேட்டிருக்கிறார்.

### உச்ச நீதிமன்றம் கேள்வி

யாருடைய ஆலோசனையின் பேரில், ஆளுநரின் செயல்பாடுகள் இருக்கிறது என்று, உச்ச நீதிமன்றம் கேள்வி கேட்டு இருக்கிறது. அதேபோல் அவர் அரசியல் சட்டத்தை முறையாக பின்பற்றுகிறாரா என்பதையெல்லாம், இன்றைக்கு உச்ச நீதிமன்றம் கேள்வி கேட்டு இருக்கிறது. ஒன்றிய அரசு இன்றைக்கு இன்னொரு வேலையை வேகமாக செய்து கொண்டிருக்கிறது.

எப்படி ஆட்டை கடித்து, மாட்டை கடித்து, கடைசியாக மனிதனை கடிக்கின்ற மாதிரி, இன்றைக்கு தமிழ்நாட்டின் உயர் கல்வியைக் கெடுக்க பாசிச பா.ஜ.க. அரசு திட்டம் போட்டு இருக்கிறது. அதற்காக தான் யு.ஜி.சி (யுனிவர்சிட்டி கிராண்ட் கமிஷன்) என்று சொல்வார்கள். அதில் புதிதாக விதிமுறைகளைக் கொண்டு வர பார்க்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இதை இந்தியாவிலேயே முதலில் எதிர்த்தது யார் என்று பார்த்தால், நம் முதலமைச்சர் அவர்கள் தான்.

பா.ஜ.க. அல்லாத அனைத்து மாநில முதல்வர்களுக்கும் இதன் அபாயத்தைப் பற்றி நம் முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார். இன்றைக்கு தமிழ்நாடு சட்டசபையிலும் இதற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. நம்மைப் பின்பற்றி கர்நாடக மாநிலம், கேரளா மாநிலத்திலும் இதேபோல் சட்டப் பேரவையில் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். இதைக் கண்டித்து நம் மாணவர் அணி நேற்று டெல்லி வரை சென்று மிகப் பெரிய போராட்டத்தை நடத்தி இருக்கிறோம்.

### கல்வியில் கை வைக்கத் துடிப்பு!

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களின் உயர்கல்வியையும் காவிமயம் ஆக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் திட்டம். அதற்காகத்தான், பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களைக் கண்டறியும் குழுவுக்கான அதிகாரத்தை, ஆளுநரின் கைகளில் ஒப்படைக்கப் பார்க்கிறார்கள்.

இப்படி நடந்தால், எல்லா பல்கலைக்கழகங்களிலும் சங்கிகள் தான் துணை வேந்தர்களாக இருப்பார்கள். எல்லா மாநிலங்களின் பண்பாட்டையும், வரலாற்றையும், அழித்து,

ஒரே வரலாற்றை எழுதவேண்டும் என்பதுதான் அவர்களுடைய நோக்கம். அதற்காகத்தான் எப்படியாவது கல்வியில கை வைக்க வேண்டும் என்று துடிக்கிறார்கள்.

### மூன்றுவிதப் பட்டியல்கள்

இதற்குக் காரணம் கல்வி பொதுப்பட்டியலில் (Concurrent List) இருக்கிறது தான். அதாவது இந்தியாவை பொறுத்தவரை 3 பட்டியல்கள் இருக்கின்றன. ஸ்டேட் லிஸ்ட் (State List– மாநில அரசுப் பட்டியல்), யூனியன் லிஸ்ட் (Union List– ஒன்றிய அரசுப் பட்டியல்) அதன் பிறகு (Concurrent List – பொதுப் பட்டியல்).

ஒன்றிய அரசுப் பட்டியலில் ராணுவம், வங்கி, வெளியுறவுக் கொள்கை, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, விமானப் போக்குவரத்து, தொலை தொடர்பு இவையெல்லாம் வருகின்றன. அடுத்து மாநில அரசுப் பட்டியலில் பொது சுகாதாரம், சட்டம்–ஒழுங்கு, உள்ளாட்சித் துறை, இவை எல்லாம் வருகின்றன.

பொதுப்பட்டியலில், வர்த்தகம், வனம், மின்சாரம் மாதிரியான விஷயங்கள் வருகின்றன. முக்கியமாக கல்வியும் பொதுப்பட்டியலில்தான் இருக்கிறது.

### மாநிலப் பட்டியலில் கல்வி

ஒரு காலத்தில் கல்வி மாநிலப்பட்டியலில் தான் இருந்தது. ஆனால், மிசா காலத்தில், அதை பொதுப்பட்டியலுக்கு எடுத்துக்கொண்டு போனார்கள்.. ஆகவே, கல்வியை, மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருவதுதான் இவற்றுக்கெல்லாம் தீர்வு.

ஏனென்றால், பல்கலைக்கழகங்களை உருவாக்குவது மாநில அரசு, பேராசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கிறது நம் அரசு, கட்டுமானங்களை மேற்கொள்வது நம் அரசு. ஆனால், துணை வேந்தர்களை

மட்டும் அவர்கள்தான் நியமிப்பார்களாம். ஒன்றிய அரசு சொல்கிற பாடத்திட்டத்தைத் தான் நம் பிள்ளைகள் படிக்க வேண்டுமாம்.

சங்கிகள் துணைவேந்தர்களாக வந்துவிட்டால், பிறகு நம்முடைய பிள்ளைகளை எல்லாம் தினமும் கோமியம் குடித்துவிட்டுத்தான், காலேஜ்க்கு வரவேண்டும் என்று சொன்னாலும் சொல்வார்கள். இவற்றையெல்லாம் தடுக்க வேண்டிய கட்டாயமும், கடமையும் நமக்கு இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டை, வஞ்சிக்கிற ஒன்றிய அரசுக்கும் – பாசிச பா.ஜ.க.வுக்கும்

### நாம் தக்க பாடம் புகட்ட வேண்டும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில்!

அதற்கு ஒரு வாய்ப்புதான், வர இருக்கும் 2026 சட்டப்பேரவைத் தேர்தல். இன்றைக்கு ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில், அடிமைகள் – சங்கிகள் என அத்தனை எதிரிகளும் தெறித்து ஓடி போய் விட்டார்கள். திராவிட மாடல் அரசுக்கான நற்சான்றிதழாக கழகம்

மாபெரும் வெற்றியைப் பெற்று இருக்கிறது. ஈரோடு கிழக்கில் நாம் பெற்றிருக்கும் இந்த வெற்றி, 2026–இல் எட்டுத்திக்கும் எதிரொலிக்க வேண்டும்.

இந்த நேரத்தில் நிதி உரிமை தொடர்பாக ஒரு சிறிய சம்பவத்தை நினைவு கூர விரும்புகிறேன். 1969–இல் அண்ணா மறைவுக்குப் பிறகு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நேரம்.

அப்போது நாடு முழுவதும் பஞ்சம் நிலவியது. அந்த நேரத்தில், தமிழ்நாட்டுக்கு நிவாரண நிதியாக 5 கோடி நிதி வேண்டுமென்று அப்போதைய ஒன்றிய துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாயிடம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நேரில் சென்று கோரிக்கை வைத்தார். அதற்கு, "எங்களிடம் பணம் காய்க்கிற மரம் எதுவும் இல்லை"– என்று மொரார்ஜி தேசாய் பதில் சொல்லி நிராகரிச்சிட்டார்.

### சபதம் ஏற்போம்

உடனே, வெகுண்டெழுந்த கலைஞர் அவர்கள், "ஐயா, இந்த உலகத்திலேயே பணம் காய்க்கிற மரம் என்று ஒன்று கிடையாது. அப்படி இருந்தால் நாங்கள் ஏன் உங்களிடம் வர போகிறோம். நியாயமாக மாநிலத்துக்கு ஒன்றிய அரசு தர வேண்டிய நிதியைத்தான் நான் கேட்டு வந்தேன்" என்று கலைஞர் கோபமாக வெளியில் வந்து விட்டார். இதுதான் தி.மு.க. இது தான் கலைஞர் அவர்கள் கற்றுத் தந்த சுயமரியாதை. தமிழ்நாட்டின் நிதி உரிமைக்காக, அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி என்றைக்கும் தி.மு. கழகம் விட்டுக்கொடுக்காமல் போராடும். நம்முடைய உரிமையை நிச்சயம் நிலைநாட்டும்.

ஆகவே, இன்றைக்கு ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்கிற வார்த்தையையே இல்லாம செய்த பா.ஜ.க.வுக்கும், அவர்களுக்குத் துணை போகிற அடிமைகளுக்கும் 2026–இல் ஒரு இடம்கூட இல்லை என்கிற அளவுக்கு நாம திருப்பி அடிக்கணும். இது வெறும் கண்டனப் பொதுக்கூட்டம் மட்டும் இல்லை. சங்கிகளையும், அவர்களின் அடிமைகளையும் மீண்டும் தமிழ்நாட்டு மண்ணில் வீழ்த்துவதற்கான ஒரு சபதமாக ஏற்க வேண்டும்.

2026 சட்டமன்றத் தேர்தலில் நாம் 200–க்கும் அதிகமான இடங்களில் வெல்ல வேண்டும். அதற்காக அடுத்து வரும் ஒவ்வொரு நாளும் உழைக்க வேண்டும் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

மாவட்டச் செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ., கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., கழக பேச்சாளர் தஞ்சை கூத்தரசன், பகுதிச் செயலாளர்கள் துக்காராம், தி.மு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், அருள்தாசன், புழல் எம். நாராயணன், ஒன்றிய செயலாளர்கள் கருணாகரன், தயாளன், அற்புதராஜ், பேரூர் செயலாளர் ராஜேந்திரன், இளைஞர் அணி துணைச் செயலாளர் சீனிவாசன், கவி கணேசன், மாவட்ட அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், துணை அமைப்பாளர்கள் சீனிவாசன், மோரை சதீஷ்குமார், கேபிள் கணேசன், மணிவண்ணன், ஜி. கே.இனியன் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் ராமநாயக்கன் பாளையம் அண்ணா நகரில் உள்ள கிளை கழக பகுதியில் கழக இரு வண்ண கொடியேற்றி தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் இனிப்புகள் வழங்கி பொதுமக்கள் மத்தியில் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, ஒன்றிய செயலாளர் டாக்டர் வே.செழியன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சி.சிவராமன், செல்வராஜ், சிவாஜி, கருணாநிதி, சேட்டு, பாலு, கவிதா, செல்வம் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மத்திய அரசின் எதிர்மறையான பட்ஜெட்டை கண்டித்து தர்மபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் பாப்பிரெட்டிப்பட்டி பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் கழக சட்ட துறைச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்கோ, தலைமை நிலைய பேச்சாளர் தாவூத் அபுபக்கர் உள்ளிட்டோர் சிறப்புரை ஆற்றினர். கூட்டத்தில் அவைத்தலைவர் கே.மனோகரன், மாநில நிர்வாகிகள் கீரை.எம்.எஸ். விஸ்வநாதன், சூடப்பட்டி சுப்பிரமணி, ராஜேந்திரன், சத்யமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் கிருஷ்ணகுமார், தலைமைசெயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன், ஒன்றிய செயலாளர்கள் முத்துக்குமார், பி.எஸ்.சரவணன், வேடம்மாள், பேரூர் கழக செயலாளர் கவுதமன், நகர செயலாளர் ஜெயச்சந்திரன் மற்றும் ஏராளமான கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.